தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

ஆறாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**D061** இலக்கியத் திறனாய்வு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. திறனாய்வு என்ற சொல்லை வழக்கத்தில் விட்டவர் யார்?
2. திறனாய்விற்கு இணையான சொல் எது?
3. திறனாய்வாளன் முதலில் யார்?
4. திறனாளி, இலக்கியத்தை அகவய நிலையில் நின்று பார்க்கிறானா? புறவய நிலையில் நின்று பார்க்கிறானா?
5. நெடுநல்வாடையை ‘அகமல்ல புறம்’ என்ற உரையாசிரியர் யார்?
6. தமிழில் பகுப்புமுறைத் திறனாய்வைப் பயன்படுத்தியவர்களில் ஒருவரைக் கூறுக.
7. சாதிமதம் பார்த்துக் காதலிக்கிற நவயுகக் காதலைக் கிண்டல் செய்தவர் யார்?
8. தன்வரலாற்று உளவியல் திறனாய்வு செய்த அமெரிக்க அறிஞர் யார்?
9. தமிழில் இன்று கிடைப்பனவற்றுள் முதல் உரையாகக் கருதப்படுவது எது?
10. தொல்காப்பியம் முழுமைக்கும் முதல்முதலாக உரையெழுதியவர் யார்?
11. வியாக்கியான சக்கரவர்த்தி என்று அழைக்கப்படுபவர் யார்?
12. ஜப்பானிய ஹைக்கூ பற்றி முதன்முதலில் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
13. பின்னை அமைப்பியலின் எழுச்சிக்கு, தொடக்கத்தில் வித்திட்ட அறிஞரைக் கூறுக.
14. ‘பெட்டைப் புலம்பல்’ என்ற வாசகத்தினால் அறியக்கூடும் மனநிலை என்ன?
15. ‘இனிப் படமாட்டேன்’ என்ற நாவலை எழுதியவர் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. திறனாய்வில் அணுகுமுறையின் இன்றியமையாமையைக் கூறுக.
2. தமிழில் ஒப்பீடு – குறிப்பு வரைக.
3. இறையனார் அகப்பொருள் எவ்வகைகளில் சிறந்தது?
4. திருக்குறள் உரைகள் பற்றிக் குறிப்பு வரைக.
5. பாரதியாரும் திறனாய்வும் – சிறு குறிப்பு வரைக.
6. மார்க்சியத் திறனாய்வாளர்கள் பற்றிக் கூறுக.
7. பெண்ணியம் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.
8. இலங்கை மலையகம் எனும் புகலிடம் – குறிப்பு தருக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) திறனாய்வாளனின் ஆற்றலும், பயிற்சியும், பணிகளும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘கலை கலைக்காகவே’ என்ற வாதம் குறித்தும், அதன் கருத்துகள் பற்றியும் கட்டுரை வரைக.

2. (அ) வரலாற்றியல் அணுகுமுறை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘திறனாய்வு இன்று செய்கிற பணியை ஏதோ ஒரு வடிவில் உரை அன்று செய்தது’ – இக்கூற்றை ஆராய்க.

3. (அ) திறனாய்வு நூல்களும் திறனாய்வும் பற்றிக் கூறி, ஈழத்துத் திறனாய்வாளர்களை அடையாளங் காட்டுக.

(அல்லது)

(ஆ) ‘பழைய இலக்கியங்களில் தலித்துகள்’ – கட்டுரை வரைக.

✱✱✱